# நான் என்ன செய்ய வேண்டும்?

தொடர் - 59

செப்டம்பர் 2013

*தொகுப்பு:* **Dr. B. வில்லியம் தர்மராஜா**

**மத்தேயு**

2901 நீ ஜெபம் பண்ணும்போது மாயக்காரரைப் போலிருக்க வேண்டாம்; உன் அறை வீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு (6:5,6)

2902 ஜெபம் பண்ணும்போது வீண் வார்த்தைகளை அலப்பாதே (6:7)

2903 உன் கடனாளிகளுக்கு மன்னிப்பாயாக (6:12)

2904 மனுஷருடைய தப்பிதங்களை மன்னிப்பாயாக (6:14,15)

2905 நீ உபவாசிக்கும் போது, மனுஷர் காணும் பொருட்டாக முகவாடலாய் இராதே (6:16)

2906 நீ உபவாசிக்கும் போது, மனுஷர்களுக்கு காணப்படாமல், அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவுக்கு காணப்படும் படியாக, உன் தலைக்கு எண்ணெய் பூசி. உன் முகத்தைக் கழுவு (6:17)

2907 பூமியிலே உனக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம்; பரலோகத்திலே சேர்த்து வை; உன் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உன் இருதயம் இருக்கும். (6:19-21)

2908 இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்யாதே (6:24)

2909 தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ் செய்யாதே (6:24)

2910 என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உன் ஜீவனுக்காகவும், என்னத்தை உடுப்போம் என்று உன் சரீரத்துக்காகவும் கவலைப்படாதே (6:25,31)

2911 முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் (உண்ண, குடிக்க, உடுக்க) உனக்குக் கூடக் கொடுக்கப்படும் (6:33)

2912 நாளைக்காகக் கவலைப்படாதே (6:34)

2913 அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும் (6:34)

2914 நீ குற்றவாளியென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிரு. நீ மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீயும் தீர்க்கப்படுவாய்; நீ மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உனக்கும் அளக்கப்படும். (7:1,2)

2915 முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு; பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகைப்பார்ப்பாய் (7:5)

2916 பரிசுத்தமானதை நாய்களுக்குக்கொடாதே (7:6)

2917 உன் முத்துக்களைப் பன்றிகள் முன் போடாதே (7:6)

2918 கேள், அப்பொழுது உனக்குக்கொடுக்கப்படும்; தேடு, அப்பொழுது கண்டடைவாய்; தட்டு, அப்பொழுது உனக்குத் திறக்கப்படும் (7:7)

2919 மனுஷர் உனக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறாயோ, அவைகளை நீயும் அவர்களுக்குச் செய் (7:12)

2920 இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசி; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது (7:13)

2921 கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிரு; அவர்கள் ஆட்டுத்தோலை போர்த்துக் கொண்டு உன்னிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள் (7:15)



2922 நல்ல கனி கொடு (7:19)

2923 பரலோகத்திலிருக்கிற பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பான் (7:21)

2924 “நான் சொல்லுகிற வார்த்தைகளைக் கேட்டு, அவைகளின் படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின் மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்” (7:24)

2925 “நீ என்னைப் பின்பற்றி வா” (8:22)

2926 உன் இருதயத்தில் பொல்லாதவைகளைச் சிந்திக்காதே (9:4)

2927 “பலியையல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன்” (9:13, 12:7)

2928 “திடன் கொள்” (9:2,22); பயப்படாதே (14:27; 17:7)

2929 அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள் (9:38)

2930 இலவசமாய்ப் பெற்றாய்; இலவசமாய்க் கொடு (10:8)

2931 வேலையாள் தன் ஆகாரத்துக்குப் பாத்திரனாயிருக்கிறான் (10:10)

2932 சர்ப்பங்களைப் போல வினாவுள்ளவனும், புறாக்களைப் போலக் கபடற்றவனுமாயிரு. (10:16)

2933 முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான் (10:22)

2934 ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு பயப்படாதே; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படு (10:28)

2935 உன் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது. ஆதலால் பயப்படாதே (10:30,31)

2936 மனுஷர் முன்பாக என்னை அறிக்கைப் பண்ணு; அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன். மனுஷர் முன்பாக என்னை மறுதலியாதே (10:32,33)

2937 ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே (10:36)

2938 தகப்பனையாவது தாயையாவது மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசியாதே (10:37)

2939 உன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்று (10:38)

2940 தீர்க்கதரிசி என்னும் நாமத்தினிமித்தம் தீர்க்கதரிசியை ஏற்றுக்கொள், தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவாய் (10:41)

2941 நீதிமான் என்னும் நாமத்தினிமித்தம் நீதிமானை ஏற்றுக்கொள். நீதிமானுக்கேற்ற பலனை அடைவாய் (10:41)

2942 “சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற் போகான்” (10:42)

2943 “வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்” (11:28)

2944 “நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உன் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்” (11:29)

2945 “என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்; என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்” (12:30)

11ம் பக்கம் பார்க்க

கிருபையின் ஊழியங்கள், தூத்துக்குடி

## திருவசனத்தேர்வு 2013

### மாதிரி வினாத்தாள்

I **சரியான வார்த்தையைத் தேர்ந்தெடுக்க :**

1. மனரம்மியமோ நித்திய .........

அ) மருந்து ஆ) விருந்து இ) மகிழ்ச்சி ஈ) ஐசுவரியம்

II **பொருத்துக**

| | |
|---|---|
| 11) அவர் பெருகவும் நான் சிறுகவும் | மாற் 1:11 |
| 12) நீர் என்னுடைய நேசகுமாரன் | யோவான் 3:30 |

III **வரிசைப்படுத்துக :**

16) இருப்பீர்களாக, திக்கற்ற, விதவைகளையும், பிள்ளைகளையும், ஒடுக்காமல்
(விடை : விதவைகளையும் திக்கற்ற பிள்ளைகளையும் ஒடுக்காமல் இருப்பீர்களாக)

IV **சரியா? தவறா?**

21 ஞானமுள்ளவனுக்குப் போதகம் பண்ணாதே

V **கோடிட்ட இடங்களை நிரப்புக :**

26 உங்களிலிருக்கிறவர் ........................

VI **இருப்பிடம் தருக :**

31) இயேசுவானவர் ............................. ஜெயிக்கிறவன் யார்?

VII **கிழ்க்கண்ட வார்த்தைகளில் தொடங்கும் வசனங்களை இருப்பிடத்துடன் எழுதுக**

36) துன்மார்க்கனுடைய வீட்டில் .................

VIII **கீழ்க்கண்ட வார்த்தைகளில் முடியும் வசனங்களை இருப்பிடத்துடன் எழுதுக.**

41) ..................................... ஐயோ என்றார்

IX **கீழ்க்கண்ட இருப்பிட வசனங்களை எழுதுக.**

46) 1பேதுரு 2:20

X **கீழ்க்கண்ட வார்த்தைகளில் தொடங்கும் வசனங்களை எழுதுக**

துன்மார்க்கனுடைய வீட்டில் ............

**கீழ்க்கண்ட வார்த்தைகளில் முடியும் வசனங்களை எழுதுக.**

...................................... ஐயோ என்றார்.

## *தூத்துக்குடியில் அற்புத உபவாச நாள்*

**நாள் : 2013 செப்டம்பர் 24 – கடைசி செவ்வாய்**
**நேரம் : காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய**
**இடம் : காமராஜர் திருமண மண்டபம்,**
**பிரையண்ட் நகர், 5வது தெரு மெயின், தூத்துக்குடி.**

*தேவசெய்தி :* **சகோ. பா. பொற்செல்வன் ஆசீர்**



# கர்த்தருடைய செட்டைகளின் கீழ் அடைக்கலம்

**சகோ. S. ஜெபராஜ்** President, Grace Ministries

இன்ப இயேசு இரட்சகரின் இனிய நாமத்தில் உங்களை வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகிறேன். ஒவ்வொரு மாத இதழிலும் வெளிவருகிற நீங்கள் தீர்மானம் எடுக்க வேண்டிய வாழ்க்கையின் மிக முக்கிய காரியங்களை வாசித்து, தியானித்து, புதிய தீர்மானங்களை கைக்கொண்டு, ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து வருகிறீர்கள் என கர்த்தருக்குள் விசுவாசிக்கிறேன். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின் கீழ் அடைக்கலமாய் வந்த ரூத், (ரூத் 2:12) தன் இழப்பின் சூழ்நிலையிலும் நிலைத்து நின்று நிறைவான பலனை பெற்றுக் கொண்ட மேன்மையான காரியத்தைக் குறித்து சிந்திக்க, தேவன் தாமே உதவி செய்வாராக.

பஞ்ச நாட்களில் மோவாப் தேசத்திலே போய்ச் சஞ்சரித்த பெத்லேகேம் ஊரானாகிய எலிமேலேக்கு அவன் மனைவி நகோமி ஆகிய இவர்களுடைய 2 மருமக்களில் ஒருத்தி மோவாப் தேசத்தாளாகிய ரூத். எலிமெலேக்கும், அவனுடைய இரண்டு குமாரர் மக்லோன் கிலியோன் என்பவர்களும் மரித்து போய்விட்டார்கள். தன் மருமகள்களாகிய ஓர்பாள், ரூத் என்பவர்களோடு நகோமி தனித்து விடப்பட்டாள். கர்த்தர் தம்முடைய ஜனங்களைச் சந்தித்து அவர்களுக்கு ஆகாரம் அருளினார் என்று அவள் மோவாப் தேசத்திலே கேள்விப்பட்டு தன் மருமக்களோடே கூட மோவாப் தேசத்திலிருந்து யூதா தேசத்திற்கு திரும்பிப்போக வழிநடந்தாள். (ரூத் 1:7)நகோமி தன் இரண்டு மருமக்களையும் நோக்கி நீங்கள் இருவரும் உங்கள் தாய்வீட்டுக்குத் திரும்பி போங்கள் என்று வாழ்த்தி முத்தமிட்டாள். அப்பொழுது ஓர்பாள் சத்தமிட்டு அழுது தன் மாமியை முத்தமிட்டு போனாள். ரூத்தோஅவளை விடாமல் பற்றிக் கொண்டாள். (ரூத் 1:14). ரூத் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின் கீழ் அடைக்கலமாய் வருகிறதற்கு அவரிடத்தில் காணப்பட்ட சிறந்த குணாதிசயங்களே காரணமாகும்.

### 1. மனஉறுதி

ரூத், தன்னோடே கூட வர மன உறுதியாயிருக்கிறதைக் கண்டு (ரூத் 1:18) என்பதாக வசனம் கூறுகிறது. நாம் உம்மைப் பின்பற்றாமல் உம்மை விட்டுத் திரும்பிப் போவதைக் குறித்து என்னேடே பேச வேண்டாம். நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன். நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன் (ரூத் 1:16) என்று ரூத் கூறுவது அவளுடைய மனஉறுதியைக் காட்டுகிறது. தேவனைப் பின்பற்றுகிற ஜனத்திற்கு இந்த மனஉறுதி மிகவும் அவசியம். உம்மை உறுதியாய் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிற படியால் நீர் அவனை பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர் (ஏசாயா 29:3). யோபு எல்லாவற்றையும் இழந்த சூழ்நிலையிலும் என் மீட்பர் உயிரோடிருக்கிறார் அவரை நானே பார்ப்பேன். அந்நிய கண்கள் அல்ல; என் கண்களே அவரைக் காணும் (யோபு 19:25,27) என்பதில் உறுதியாய் இருந்தார். எனவே இழந்துபோனதை மாத்திரமல்ல, மடங்காய் பெற்றுக்கொண்டார். எல்லாச் சூழ்நிலைகளிலும் தேவனை உறுதியாய் பற்றிப்பிடித்துக் கொள்ளுங்கள். ஆவி, ஆத்துமா, சரீரம் யாவிலும் வாழ்ந்து சுகித்திருப்பீர்கள்.

**2. உழைப்பு**

ரூத் போய் வயல்வெளியில் அறுக்கிறவர்கள் பிறகே பொறுக்கினாள் (ரூத். 2:3). மோவாபிய ஸ்திரீயான ரூத்திற்கு பெத்லகேம் அந்நிய இடம். ஆனாலும் அவள் தானும், தன் மாமி நகோமியும் ஜீவனம் பண்ணுவதற்காக வேலை செய்து பாடுபட தன்னை அர்ப்பணிக்கிறாள். அரிக்கட்டுகள் நடுவே பொறுக்குவது ஈனமான வேலை (ரூத் 2:15). அதையும் பொருட்டாக எண்ணாமல் கடினமாக உழைப்பதற்குத் தன்னை அர்ப்பணிக்கிறாள். அவள் சாயங்காலமட்டும் வயலிலே கதிர் பொறுக்கினாள். (ரூத் 2:17). ஒருவன் வேலை செய்ய மனதில்லாதவன் சாப்பிடவும் கூடாது (2தெச. 3:10) என்பதாக வேதம் கற்றுக்கொடுக்கிறது. உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய் உனக்கு பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும். (சங். 128:2). நீ சோம்பேறியாய் உன் நாட்களை கழிப்பதை தேவன் விரும்பவில்லை. சோம்பேறியே நீ எறும்பினிடத்தில் போய், அதின் வழிகளைப் பார்த்து ஞானத்தைக் கற்றுக் கொள். (நீதி. 6:6). உனக்கு கொடுக்கப்பட்ட வேலையை முழுமனதோடு செய்வதற்கு ஜாக்கிரதையாய் இரு. உத்தமமும் உண்மையுள்ள ஊழியக்காரனாய் கொஞ்சத்திலே உண்மையாய் செயல்பட வேண்டும். (மத். 25:21,23) தேவன் கொடுத்திருக்கிற தாலந்துகளைப் பயன்படுத்த வேண்டும். நீங்கள் வைக்கப்பட்டிருக்கிற இடத்திலே, நிலைமையிலே தேவனுக்குப் பயந்து உழைக்க தேவன் விரும்புகிறார். உலக பணியானாலும் தேவ பணியானாலும் உண்மையுடன் செய்ய வேண்டும். ரூத்தின் முயற்சியும் உழைப்பும் அவள் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின் கீழ் அடைக்கலமாவதற்கு காரணமாய் அமைந்தது.

**3. மனத்தாழ்மை :-**

அப்பொழுது ரூத் தரையிலே முகங்குப்புற விழுந்து வணங்கி (ரூத் 2:10) போவாஸைப் பார்த்து என் ஆண்டவனே, உம்முடைய கண்களில் எனக்குத் தயை கிடைக்க வேண்டும். நான் உம்முடைய வேலைக்காரிகளில் ஒருத்திக்கும் சமானமாயிராவிட்டாலும் நீர் எனக்கு ஆறுதல் சொல்லி உம்முடைய அடியாளோடே பட்சமாய்ப் பேசினீரே என்றாள். (ரூத் 2:13). கோதுமை அறுப்பும், வாற்கோதுமை அறுப்பும் தீருமட்டும் அவள் கதிர் பொறுக்கும்படிக்கு போவாசுடைய வேலைக்காரிகளோடே கூடியிருந்து, தன் மாமியினிடத்தில் தங்கினாள். (ரூத் 2:23). அவளுடைய மனத்தாழ்மை வாழ்க்கையில் மேன்மையைக் கொண்டு வந்தது. தாழ்மை நம்மிலே ஒன்றித்த குணாதிசயமாய் இருக்க வேண்டும். “அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் தாழ்மையுள்ளவரும்” (சக. 9:9) என்று எழுதப்பட்டுள்ளது. அவர் தம்மை தாழ்த்தினபோது அவருடைய நியாயம் எடுத்துப் போடப்பட்டது. (அப். 8:38) அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு மரணபரியந்தம் அதாவது சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி தம்மைத்தாமே தாழ்த்தினார். (பிலி. 2:8) கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைபடுங்கள். அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார் (யாக். 4:10). தாழ்த்துகிறதினால் உயர்த்தப்படுவேன் என்ற எதிர்பார்த்தலோடு அல்ல தாழ்மையை நீங்கள் அணிந்து கொள்ளுங்கள். கர்த்தருடைய செட்டைகளின் கீழ் அடைக்கலம் கிடைக்கும்.

**4. நற்சாட்சி**

மாமியார் பாராட்டுகிற மருமகள் ரூத். ஒலிமுக வாசலிலிருக்கிற சகல ஜனங்களும் மூப்பரானவர்களும் போவாசையும் ரூத்தையும் வாழ்த்துகிறார்கள். (ரூத் 4:11)



ஸ்திரீகள் நகோமியைப் பார்த்து இன்று உனக்கு தயை செய்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம் என்றும் ரூத் உனக்கு அருமையாயிருக்கிற மருமகள் (ரூத் 4:14,15) என்று அவர்களைக் குறித்து சாட்சி பகருகிறார்கள். இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாற்று பட்டியலில் ரூத் இடம் பெற்றாள். போவாஸ் ஓபேதை ரூத்தினிடத்தில் பெற்றான். (மத். 1:5). இவ்வாறு மேன்மையான ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக் கொண்டாள். நீங்களும் ரூத்தைப் போல நற்குணங்களை அணிந்து கொள்ளுங்கள்.

எனது தீர்மானம் : ரூத்தைப் போல, இழப்பானாலும் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின் கீழ் அடைக்கலமாய் அடங்கயிருக்கத் தீர்மானிக்கிறேன்.

# தேவாலயம்!

**Dr. பொ. செல்வராஜ்** கோவை

பவுலடிகளார் எபேசியருக்கு எழுதிய மடலை வாசித்துப் பாருங்கள். நாம் தான் தேவாலயம். தேவாலயம் நாம் தான். ஒவ்வொரு விசுவாசியும் கிறிஸ்துவின் உடலில் ஓர் உறுப்பாவார். தேவாலயத்தின் பெயர் கிறிஸ்துவின் உடல். கிறிஸ்தவன்(ள்) எனும் சொல் தேவாலயத்தின் இன்னொரு இணைச் சொல்லாகும். எபேசியர் மடலில் தேவாலயத்தைக் குறிப்பிடும் ஆறு உருவகங்களைக் காண்கிறார்.

I **கிறிஸ்துவின் உடலாகிய தேவாலயத்தில் கிறிஸ்துவே தலையாக இருக்கிறார்.**
எபேசியர் 1:22-23; தேவனால் நியமிக்கப்பட்ட கிறிஸ்து.

II **தேவாலயம் ஒரு ஆவியானவர் இல்லம்**
எபேசியர் 2:21-22; தேவ ஆவியானவர் உறையும் இடம்

III **தேவாலயம் ஒரு புதிய மனிதன்**
(2கொரிந்தியர் 5:17; கிறிஸ்துவுக்குள்ளிருப்பவன் புதிய படைப்பாக இருக்கிறான்)
எபேசியர் 4:24; நீதியிலும் தூய்மையிலும் தேவனைப் போலிருக்க உருவாக்கப்படும் புதிய மனிதன்.

IV **தேவாலயம் ஒரு இரகசியம்**
எபேசி 3:8-10; தேவனுடைய ஞானம் தேவாலயம் வாயிலாக வெளிப்படுத்தப்படுகிறது.

V **தேவாலயம் ஒரு மணமகள்**
எபேசியர் 5:25-27; கணவன் மனைவியிடம் அன்புகூருவதுபோல் கிறிஸ்துவும் தேவாலயத்தில் அன்பு கூருகிறார்.

VI **தேவாலயம் ஒரு படைவீரன்**
எபேசியர் 6:13-17; தேவனுடைய முழு ஆயுதம் ஏந்தவேண்டிய படைவீரனாகிய தேவாலயம்.

தேவாலயம் வழியாக தேவன் செயல்வடுவதை உலகத்தார் அறியாமலிருக்கலாம். ஏனெனில் உலகிற்குப் பரலோக அனுபவம் கிடையாது. ஆனால் நமக்குத் தெரியும். தேவனுடைய வல்லமை நம் வழியாகப் புறப்பட்டுச் செல்கிறது. தேவனின் அன்பு நம்மிலிருந்து பாய்ந்தோடுகிறது. யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. நாம் வெற்றியின் பக்கம் இருக்கிறோம். ஏன் நாம் சோர்வடைய வேண்டும்? நாம் செய்ய வேண்டிய காரியம் ஒன்றே. நம்முடைய அழைப்பிற்குகந்தவர்களாக நாம் வாழ வேண்டும். அவ்வளவுதான்!

## V.B.S. 2013 நடைபெற்ற கிராமங்கள் பெயர்சொல்லி ஜெபியுங்கள்

இந்த ஆண்டு V.B.S. நடைபெற்ற இடங்களின் பட்டியலில் ஒரு பகுதியை சென்ற மாதம் உங்கள் ஊக்கமான ஜெபத்திற்காக தந்திருந்தோம். அதன் தொடர்ச்சி கீழே பார்க்கிறீர்கள். V.B.S. நடைபெற்ற இடங்களிலெல்லாம் சுவிசேஷத்தை அறிந்த சிறியோர், பெரியோர் எல்லோரும் தேவனை நோக்கி திரும்பும் படியாகவும் நல்ல நிலத்தில் விழுந்த விதையைப் போல வேத வசனம் அவர்கள் உள்ளத்தில் செழித்தோங்கும்படியாகவும் நாம் தேவனுடைய பாதத்தில் ஜெபித்து காத்திருப்போம். மீதிப்பட்டியல் அடுத்த இதழில் வெளியிடுவோம்.

**மதுரை மாவட்டம்**

பணித்தளம் : **திரளி**

167 அச்சம்பட்டி
168 திரளி
169 ஆலம்பட்டி
170 மீனாட்சிபுரம்
171 வலையப்பட்டி
172 நடுவக்கோட்டை
173 கிழவனேரி
174 கிழவனேரி காலனி
175 ஆலம்பட்டி 1
176 சௌடார்பட்டி

பணித்தளம் : **சாத்தூர் ரூரல்**

177 சாத்தூர்
178 வாழவந்தான்புரம்
179 நடுச்சூரங்குடி
180 ஸ்ரீரெங்காபுரம்
181 ஒத்தையால்
182 ஒத்தையால் காலனி
183 சிலோன் காலனி
184 சின்னக் கொல்லப்பட்டி
185 நீராவிப்பட்டி
186 மேட்டுப்பட்டி காலனி
187 அனைக்கரைப்பட்டி
188 ஆலம்பட்டி
189 நல்லான் செட்டிபட்டி
190 பிறவிப்பட்டி
191 சுந்தரக்குடும்பட்டி
192 செட்டுடையான்பட்டி

பணித்தளம் : **சிவகாசி**

193 பாரதிநகர்
194 மாநகச்சேரி
195 முத்துசாமிபுரம்
196 உண்டு உரைவிடபள்ளி ஈஞ்சார்
197 என் புதூர்

பணித்தளம் : **புல்லக்கவுண்டன்பட்டி**

198 வல்லம்பட்டி
199 பாறைப்பட்டி
200 புல்லக்கவுண்டன்பட்டி கிராமம்
201 புல்லக்கவுண்டன்பட்டி (காலனி)
202 பனையடிப்பட்டி கிராமம்
203 கொம்மங்கியாபுரம்

பணித்தளம் : **பழைய அப்பனேரி**

204 சித்திரம்பட்டி
205 சித்திரம்பட்டி காலனி
206 புது அப்பனேரி
207 ஆவல் நத்தம்
208 சாமி தேவன் பட்டி
209 பழைய அப்பனேரி
210 பிள்ளையார் நத்தம்
211 மேலப்பட்டி
212 அப்பனேரி காலனி

பணித்தளம்: **பண்டுதன்பட்டி**

213 வெள்ளாகுளம்
214 வெள்ளாகுளம் காலனி
215 வெள்ளாகுளம் காலனி
216 நக்கமங்களம்
217 தெற்குளம்பட்டி
218 பண்டுதன்பட்டி
219 ஆலத்தூர்
220 நொச்சிகுளம்
221 அப்பநாயக்கர்பட்டி
222 நாகபாளையம்
223 அப்பநாயக்கர் பட்டி காலனி
224 மாயதேவன் பட்டி
225 மாலையூரணிப்பட்டி
226 கோப்பை நாயக்கர் பட்டி

பணித்தளம் : **புல்லலக்கோட்டை**

227 புல்லலக்கோட்டை
228 நல்லம் நாயக்கன்பட்டி
229 குராயூர் மேற்கு
230 குராயூர் காலனி
231 சித்தூர் காலனி
232 சித்தூர் ஹாஸ்டர்
233 சித்தூர் காலனி
234 நந்தி ரெட்டியாப்பட்டி காலனி
235 சேர்வைக்காரன்பட்டி

பணித்தளம் : **அழகப்பபுரம்**

236 சமத்துவபுரம்

பணித்தளம் : **புல்லக்கவுண்டன்பட்டி**

237 கொம்மங்கிபுரம்
238 புல்லக்கவுண்டன்பட்டி
239 புல்லக்கவுண்டன்பட்டி காலனி
240 வல்லம்பட்டி
241 பாரப்பட்டி
242 பனையடிப்பட்டி

பணித்தளம் : **திருவேங்கிடபுரம்**

243 அச்சுந்தவிர்த்தான் மேற்கு
244 திருவேங்கிடபுரம்
245 திருவேங்கிடபுரம் காலனி
246 கோடாங்கிப்பட்டி கிழக்கு
247 ரெட்டியப்பட்டி
248 அச்சுந்தவிழ்த்தான் கிழக்கு
249 கோடாங்கிப்பட்டி கிழக்கு



பணித்தளம் : **தோப்புபட்டி**

250 பழைய கோட்டை
251 தோப்புபட்டி
252 பேசங்கம்பட்டி
253 கொட்டுகாளான்பட்டி
254 பெரிய குளத்துப்பட்டி
255 உப்பாத்துப்பட்டி
256 அமையபுரம்
257 சரவணமபட்டி
258 சாமியார் தோப்பு
259 ஒந்தாம்பட்டி
260 அமையபுரம்
261 ரெட்டியபட்டி
262 புறத்தாக்குடி
263 அமையபுரம் காலனி
264 தோப்புபட்டி காலனி

**கன்னியாகுமரி மாவட்டம்**

265 தென்தாமரைக்குளம்

விடுபட்ட கிராமங்கள்

பணித்தளம் : **பேட்மாநகரம்**

266 சிவகளை பரம்பூர்
267 பேரூர் காலனி
268 சாமியாத்து

பணித்தளம் : **அம்பை**

269 வேலாயுதநகர்
270 பெரிய குளம் தெரு

## செய்திகள்...

- தமிழக அரசின் ஒராண்டு பட்ஜெட்டில் 125000/- கோடி நிதி ஒதுக்கப்படுகிறது. இதில் 43,500 கோடி ரூபாய் இலவச திட்டத்திற்காக மட்டுமே செலவழிக்கப்படுகிறது. இது ஒரு பட்ஜெட்டில் 40%க்கும் மேலான தொகை. இலவசத்திற்காக செலவழிக்கப்படும் தொகை தொழில் வளர்ச்சிக்கு அதாவது விவசாய வளர்ச்சிக்கு, கல்வி வளர்ச்சிக்கு செலவழிக்கப்படும் தொகையை விட பலமடங்கு அதிகம். இலவசத்திற்கு செலவழிக்கப்படும் இந்த தொகை மாநில வளர்ச்சிக்கு செலவழிக்கப்பட ஜெபியுங்கள்.
- ஒரு நாளைக்கு ரூ. 100 TASMACக்கில் குடிக்க செலவழிக்கிற ஒருவன் ஓராண்டில் 36,500 ரூபாய் மது குடிக்க செலவழிக்கிறான். 5 ஆண்டுகளில் 1,82,500 ரூபாய். 5 ஆண்டுகளில் குடித்தே அழிக்கிறான். ஆனால் இலவசம் மூலமாக அவனுக்கு கிடைக்கும் பொருட்களின் மதிப்பு ரூ. 20,000/- மட்டுமே. TASMAC மூலம் ஆண்டுக்கு ரூ. 23,000 கோடி வருமானம் பெற்று அதன் மூலம் இலவசங்களை கொடுத்து அரசு குடிமக்களை சுரண்டுகிறது. இந்த சூழல் மாற ஜெபியுங்கள்.
- தமிழகம் - குஜராத். பஞ்சாப், ஹரியானா போன்ற பொருளாதார முன்னேற்றத்தில் முன்னனியில் உள்ள மாநிலங்களை விட சமூகம், பொருளாதாரம், பாதுகாப்பு, பொது சுகாதாரம் ஆகிய இவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை கண்டுள்ளது.
  இதற்கு காரணம் தமிழகத்தில் செயல்படும் ஆரம்ப சுகாதார மையங்கள், இலவச மருந்துகள், சிகிச்சைகள், சத்துணவு திட்டம், அங்கன்வாடி மையங்கள், அரசு பஸ்கள் போன்றன.
  தமிழகத்தில் 98% சதவீத குழந்தைகளுக்கு மதிய உணவு திட்டம் கிடைக்கிறது. 5-16 வயதுக்குட்பட்ட 99.9 சதவீத குழந்தைகள் கல்வி கற்கிறார்கள். 80.9 சதவீத குழந்தைகள் தடுப்பு மருந்து பெறுகின்றனர்.
  தமிழகத்தை ஒரு தனிநாடு என்று கொள்வோமானால் அதை தெற்காசியாவிற்கே ஒரு முன்மாதிரியாக சொல்லலாம் என்கின்றனர் அமர்த்தியாசென், ஜே.இன், பேரிசுடன் ஆகிய பொருளாதார நிபுனர்கள்.

---

3ம் பக்க தொடர்ச்சி

2946 பரிசுத்த ஆவிக்கு விரோதமாய் பேசாதே; அது இம்மையிலும் மறுமையிலும் மன்னிக்கப்படுவதில்லை (12:31,32)
2947 மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் (12:36)
2948 வசனத்தைக் கேட்கிறவனும் உணருகிறவனுமாயிரு (13:23)
2949 தீர்க்கதரிசியே! உன் ஊரிலும் உன் வீட்டிலுமேயன்றி வேறெங்கும் நீ கனவீனமடையாய் (13:57)
2950 உன் அவிசுவாசம் அற்புதங்கள் செய்ய ஆண்டவரைத் தடுக்கும் (13:58)

## V.B.S. 2013 - தன்னார்வ ஊழியர்கள்

இந்த ஆண்டு V.B.S. பணியில் இணைந்து தன்னார்வமாக பணியாற்றிய சகோதரர், சகோதரிகள் பெயர் பட்டியலை உங்கள் ஊக்கமான ஜெபத்திற்காக தந்துள்ளோம். இவர்களில் பலர் பல ஆண்டுகளாக நமது V.B.S. ஊழியத்தில் ஆலயமில்லா கிராமத்தில் நம்மோடு இணைந்து செயலாற்றி வருகிறவர்கள். சிலர் இந்த ஆண்டு புதிதாகவும் இணைந்து செயலாற்றி உள்ளனர். இணைந்து செயலாற்றிய தன்னார்வ ஊழியர்கள் பெயர்கள் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது. இன்னும் சிலப் பணித்தளங்களிலிருந்து பெயர்கள் வர வேண்டியுள்ளது. மீதிப் பெயர்களை அடுத்த இதழில் வெளியிடுவோம். தேவன் இவர்களை பெலப்படுத்த ஆசீர்வதிக்க தொடர்ந்து ஊழியங்களில் ஆசீர்வாதமாய் பயன்படுத்த ஜெபியுங்கள்.

**தூத்துக்குடி மாவட்டம்**

பணித்தளம் : **ஆண்டாள்நகர்**

1 Bro. ஜாண்
2 Sis. ஏஞ்சல்
3 Bro. பிரின்ஸ்
4 Bro. காட்வின்

பணித்தளம் : **தாதன்குளம்**

5 Bro. சரண்
6 Bro. சுடர் வேலன்
7 Bro. R. ஜெபஸ்டின்
8 Sis. R. அனுசுயா
9 Sis. R. சித்ரா
10 Sis. மேரி
11 Bro. சாலமோன் ராஜா
12 Bro. முகுந்தன்

பணித்தளம் : **பேட்மாநகரம்**

13 Bro. J. ஜாண் டேனியல்
14 Bro. J. ஜான் சாமுவேல்
15 Bro. குமார வடிவு
16 Sis. P. கிருபா
17 Sis. D. விஜயா
18 Sis. M. தேவி
19 Sis.A.சின்ன காசியம்மாள்

பணித்தளம் : **மூலக்கரை**

20 Bro. M. காளிதாஸ்
21 Bro. S. டேனியல் ராஜ்
22 Bro. பவுல்
23 Bro. சரவணன்
24 Sis. தெய்வானை
25 Sis. பிரபா
26 Sis. உஷா
27 Sis. சுமதி
28 Sis. ஆனந்தி

பணித்தளம் : **திருக்களூர்**

29 Sis. R. எஸ்தர் ரஜினி
30 Sis. R. எஸ்தர் ராணி
31 Sis. V. எப்சிபா
32 Sis. M. எஸ்தர் கனி
33 Sis. S. கஸ்தூரி
34 Bro. S. ஆனந்தராஜ்
35 Sis. C. பியூலா
36 Sis. A. பத்மா

பணித்தளம் : **பட்டாண்டி விளை**

37 Sis. A. சாராள்
38 Sis. S. எமிமாள்
39 Sis. P. பியூலா
40 Sis. G. கிரேஸி
41 Bro. K. ஜெபராஜ்
42 Sis. C. சிந்தியா
43 Sis. S. ஜெபமலர்
44 Sis. S. பிளாரன்ஸ்
45 Sis. G. பிளஸ்ஸி
46 Sis. M. ஜோஸ்லின்
47 Sis. C. கிருபா
48 Sis. S. எஸ்தர்

பணித்தளம் : **புதுக்கோட்டை**

49 Mrs. மேகலா செல்வராஜ்
50 Mrs. பகவதி
51 Mrs. ஞானவடிவு
52 Mrs. பொன்னுத்தாய்
53 Mrs. ஜெயராணி
54 Mrs. நிர்மலா
55 Sis. ஜேஸ்மின்
56 Sis. அகிலா
57 Sis. மல்லிகா
58 Sis. மாற்கமேரோ
59 Sis. பியூலா
60 Sis. திவ்யா
61 Mrs. ஜெபஜோதி
62 Sis. ஜெரின்
63 Sis. ஒலிவியா
64 Sis. ஹெவன்ரோஸ்
65 Mrs. சத்யா
66 Sis. ஆன்சி
67 Sis. சாராள்

பணித்தளம் : **புல்லலக்கோட்டை**

68 Sis. P. பிரேமா
69 Sis. பூங்கொடி
70 Sis. பிரியதர்ஸினி
71 Bro. P. ஜான்சன்
72 Bro. பிலிப்பு

பணித்தளம் : **அய்யனேரி**

73 Bro. ஜெயமணி
74 Sis. ஷாலினி
75 Sis. பவித்ரா
76 Sis. பாக்கியலெட்சுமி
77 Sis. நிவேதா
78 Sis. எலிசபெத்
79 Sis. செல்வமணி
80 Sis. சிவானி
81 Sis. சௌமியா



82 Sis. பவித்ரா
83 Sis. சாந்தி
84 Bro. ராமானுஜம்
85 Bro. இஸ்ரவேல்

பணித்தளம் : **சிவகாசி**

86 Sis. சுஸ்மிதா
87 Sis. ரூத்
88 Sis. பிருந்தா
89 Bro. பிரமோத்
90 Bro. ஜெரோம்
91 Sis. எலிசபெத்

பணித்தளம் : **திரளி**

92 Bro. ஸ்டெபின்
93 Sis. எஸ்தர் ஷைனி
94 Sis. ரூபவதி பெனி
95 Bro. முத்துராஜ்
96 Bro. செல்வபாண்டி
97 Sis. பியூலா
98 Sis. மணிமேகலை
99 Bro. ஸ்டீபன்
100 Sis. முத்துலெட்சுமி

பணித்தளம் : **தோப்புபட்டி**

101 Bro. அருண் பிரகாஷ்
102 Bro. தனபாலன்
103 Bro. பரணிகுமார்

பணித்தளம் : **ஏழாயிரம்பண்ணை**

104 Sis. ஜோதி
105 Sis. ஜான்ஸி
106 Sis. தெபோராள்

பணித்தளம் : **முத்தாண்டியாபுரம்**

107 Sis. ஹெலன்

பணித்தளம் : திருவேங்கிடபுரம்

108 Mr. ஜெபத்துரை
109 Mrs. கிறிஸ்டி ஊழியர்கள்

பணித்தளம் : **மைப்பாறை**

110 Sis. எமிமாள்

பணித்தளம் : **புல்லக்கவுண்டன்பட்டி**

111 Bro. தீமோத்தேயு

பணித்தளம் : **சாத்தூர் ரூரல்**

112 Bro. முத்து
113 Bro. பெருமாள்
114 Sis. ஏஞ்சல்
115 Sis. ஜெனிபர்
116 Bro. நெகேமியா
117 Bro. நித்திஸ்
118 Sis. ரஞ்சனி
119 Bro. மோகன்
120 Bro. ரமேஷ்

பணித்தளம் : **பிரமுத்துவிளை**

121 Sis. J. ஜெபபியூலா
122 Sis. J. ஜெப பிரிஸில்லா
123 Bro. J. ஜெப நவமணி
124 Sis.A.சுதா தங்கசொர்ணம்
125 Sis. A. ஜெயமணி பிரியா
126 Sis. M. பிளஸ்ஸி
127 Sis. ராணி

பணித்தளம் : **பெரியநாயகபுரம்**

128 Sis. சிலோமி
129 Sis. ரேவதி
130 Sis. தெபோராள்

பணித்தளம் : தாளமுத்துநகர்

131 Sis. ரெஜினா
132 Sis. மெல்டா
133 Bro. மேஷாக்
134 Bro. காலேப்
135 Sis. பொன்ராணி
136 Sis. தெபோராள்
137 Sis. குளோரி
138 Sis. ஷைனி
139 Sis. பெல்சியா ராணி
140 Sis. உமா மகேஸ்வரி
141 Sis. சுமதி
142 Sis. பியூலா
143 Sis. எஸ்தர்
144 Sis. எப்சிபா
145 Sis. ஜெயா
146 Sis. அமுதா
147 Sis. கோமதி
148 Sis. அனுசியா
149 Sis. செலின்
150 Sis. பிரியா
151 Sis. கிரேஸ்லின் ஐடா
152 Sis. ஜோதி
153 Bro. பாலராஸ்
154 Bro. அருள்

**திருநெல்வேலி மாவட்டம்**

பணித்தளம் : **அழகப்பபுரம்**

155 Sis. சுமதி
156 Sis. மீனா
157 Sis. சரண்யா
158 Sis. அபிதா

பணித்தளம் : **அத்தியூத்து**

159 மரியாள்
160 Sis. கிரேஸ்
161 Sis. முத்துக்கனி
162 Bro. அருள்
163 Sis. சலோமி லீதியாள்
164 Bro. முருகன்

பணித்தம் : **திருவேங்கிடம்**

165 Bro. P. பிரபு
166 Sis. மேரி
167 Sis. P. கலைச்செல்வி
168 Bro. பச்சைபாலன்

பணித்தளம் : **தொப்பம்பட்டி**

169 Sis. சரண்யா
170 Sis. கார்த்திக்
171 Bro. சந்தோஷ் பாண்டி
172 Sis. பவித்ரா
173 Sis. ஈஸ்வரி
174 Sis. S. ரோஸி
174 Bro. பாலமுருகன்

**தேவை ஜெபியுங்கள்** ஆலயமில்லாத கிராமங்களில் நற்செய்தி கூட்டங்கள், வாலிபர், சிறுவர் முகாம்கள் நடத்த மின்சார ஜெனரேட்டர்கள் தேவை. ஒரு ஜெனரேட்டரின் மதிப்பு ரூ. 60,000/- இரண்டு ஜெனரேட்டரின் மதிப்பு ரூ. 1,20,000/- தேவையை தாங்க முன் வருகிறவர்களை ஜெபத்துடன் தாங்க அழைக்கிறோம்.

*கிருபையின் ஊழியங்களின்*

## 24 மணி நேர உபவாச ஜெபம்

இடம் : **புதுவாழ்வு மையம், அனுப்பங்குளம், சிவகாசி வந்து சேர வழி சிவகாசியிலிருந்து சாத்தூர் வரும் வழியில் அல்லது சாத்தூரிலிருந்து சிவகாசி வரும் வழியில் கோணம்பட்டி பஸ் ஸ்டாப் எனக் கேட்டு இறங்கி வரவும்**

நாள் : **9-9-2013 திங்கள் கிழமை (அரசு விடுமுறை)**

நேரம் : **8-9-2013 ஞாயிறு இரவு 9 மணி முதல் 9-9-2013 இரவு 9 மணி வரை**

## 12 மணி நேர உபவாச ஜெபம்

இடம் : **வானத்தின் வாசல், ஜெப மையம், சிவகாசி**

நாள் : **28-9-2013 கடைசி சனிக்கிழமை**

நேரம் : **28-9-2013 காலை 6 மணி முதல் மாலை 6 மணி முடிய**

குறிப்பு : ஜெபம் முடிந்து இரவு உணவு உண்டு. பதிவுக்கட்டணம் ரூ. 20/-

தேசத்திற்காய் ஜெபிக்க தேவ பிரசன்னத்தை அனுபவிக்க ஆசீர்வதிக்கப்பட அன்புடன் அழைக்கிறோம்.

தொடர்பு : மன்றாட்டு ஜெப ஐக்கிய குழு, சிவகாசி. செல் : 9894714768

## வாழ்த்துகிறோம்

நமது விருதுநகர் மாவட்டம், புல்லலக்கோட்டை மிஷனெரி சகோ. ஜேம்ஸ் மணிகண்டன் அவர்கள் சகோதரி. கேத்தரின் காயத்ரி அவர்களோடு தேவ சமூகத்தில் 23-7-2013 அன்று திருமணத்தில் இணைக்கப்பட்டார்கள். மணமக்களை ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகிறோம்.

## *நமது ஊழியங்களை தாங்குவோர் கவனத்திற்கு*

நீங்கள் ஜெபத்துடன் நமது மிஷெனரி ஊழியத்தை, வாலிப, மாணவ, சிறுவர் ஊழியத்தை, ஜெப ஊழியத்தை தாங்க காணிக்கைகள் அனுப்பும் போது வங்கி கணக்குகள் மூலமும் அனுப்பலாம்.

| வங்கி கணக்கு பெயர் | IFS Code | வங்கி பெயர் | கணக்கு எண் |
|---|---|---|---|
| மிஷனெரி ஊழியம்<br>Grace Ministries<br>Grace Ministries | SBIN0007629<br>TMBL0000156 | SBI Bazaar, Tuticorin<br>TMB Ltd., Sipcot Tuticorin | 10237757808<br>156100710400123 |
| வாலிப மாணவர் சிறுவர் ஊழியம்<br>Young Soul Winners Mission | TMBL0000035 | TMB Ltd., Pudukottai. Tuty | 035100710400087 |
| ஜெப ஊழியம்<br>Tabernacle of God Mission | TMBL0000033 | TMB Ltd., Elairampannai. | 033100710400026 |

நீங்கள் அனுப்பும் காணிக்கைகள் யாவும் ஊழியத்தில் வரவு வைக்கப்பட்டு உங்களுக்கு இரசீது அனுப்பப்படும்.

நீங்கள் காணிக்கை அனுப்பியதை 94432-89026 என்ற எண்ணிற்கு SMS மூலமாகவோ அல்லது கடித மூலமாகவோ எங்களுக்கு தெரிவியுங்கள்.



## *தேவனை துதிப்போம்*

பணித்தளம் : **பேட்மாநகரம்**

சகோ. பிரகாஷ் திருமணத்தை தேவன் நடத்திக் கொடுத்தார்.

பணித்தளம் : **தாதன்குளம்**

சகோ. சௌந்திரராஜ் நடந்த ஆப்ரேஷனில் கர்த்தர் கூட இருந்து பூரண சுகத்தை கொடுத்தார்.

பணித்தளம் : **திருக்களூர்**

சகோ. முத்து அவர்களுக்கு பெலவீனத்தை மாற்றி பூரண சுகம் கொடுத்த தேவனைத் துதிப்போம்.

பணித்தளம் : **பண்டுதன்பட்டி**

கோப்பைநாயக்கன்பட்டி - சகோதரி சங்கரேஸ்வரி திருமணத்தில் ஏற்பட்ட தடைகளை மாற்றி நேர்த்தியாய் திருமணம் நடக்க தேவன் கிருபை செய்தார்.

பணித்தளம் : **சாத்தூர் ரூரல்**

எழுந்து நடக்க முடியாமல் இருந்த சகோ. லிங்கராஜ் எழுந்து உட்காரவும், நடக்கவும் கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

## *பணித்தளங்களுக்காய் முழங்காலில்*

### தூத்தக்குடி மாவட்டம்

பணித்தளம் : **பேட்மாநகரம்**

வாலிபர்கள் எல்லோரும் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்

**ஸ்ரீவைகுண்டம் :** சகோ. ரமேஷ் பயத்தின் ஆவியிலிருந்து விடுதலை பெற...

**ஆண்டாள் நகர் :** சமத்துவபுரத்தில் மூன்றாவது ஆராதனை ஆரம்பிக்கப்பட காணப்படுகிற தடைகள் மாற ஜெபிப்போம்

சகோ. பொன் செண்டு குடும்பத்தில் சத்துருவின் போராட்டம் மாறி அடிக்கடி குடும்பத்தினரை பெலவீனப்படுத்துகிற கிரியைகளிலிருந்து குடும்பத்தினர் விடுவிக்கப்பட

பணித்தளம் : **ஸ்ரீமூலக்கரை கீலூர்**

சகோ. மாரிமுத்து அவர்களுக்கு பூரண சுகம் கிடைக்க குடும்பமாய் ஆலயத்திற்கு வர ஜெபிப்போம்

பணித்தளம் : **திருப்புளியங்குடி** - ஜெபவீடு கட்டி முடிக்கப்பட

பணித்தளம் : **கீழத்தட்டப்பாறை**

மாதந்தோறும் சுவிசேஷ ஊழியம் நடைபெற... உமரிக்கோட்டை, மேலத்தட்டப்பாறை கிராமங்களில் பெரிய அறுவடை கிடைக்க....

பணித்தளம் : **பட்டாண்டிவிளை**

தொட்டியான் குடியிருக்கு கலந்து கொண்டு பிள்ளைகள் ஒவ்வொருவரும் கர்த்தருக்குள் பலப்பட பெற்றோர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

பணித்தளம் : **திருக்களூர்**

**பால்குளம்** - சகோ. பால்ராஜ் அவர்கள் மகன், மகளுக்கு காணப்படுகிற பெலவீனத்தின் நிமித்தம் குடும்பத்தில் காணப்படுகிற சமாதான குறைவுகள் நீங்கி சமாதானம் உண்டாக

**புதுக்கோட்டை** - சகோ. ஜெயராஜ்-க்கு நல்ல வேலை கிடைக்க...

தூத்துக்குடி ரூரல் : திருமணமாகி 8 வருடங்களாக குழந்தையில்லாமல் இருக்கிற ஜாய் என்ற சகோதரிக்கு கர்ப்பத்தின் கனி தேவன் அருள ஜெபிப்போம்.

**விருதுநகர் மாவட்டம்**

பணித்தளம் : **பழைய அப்பனேரி**

சகோதரி. சந்திரா கடன் பிரச்சனையிலிருந்து விடுபட குடும்பத்தில் சமாதானம் உண்டாக....

பணித்தளம் : **ஏழாயிரம்பண்ணை**

சகோ. கனகமுத்து மனநிலை மாற... சிவகாசி – திருமணமாகி 12 வருடமங்களாக குழந்தையில்லாமல் கஷ்டப்படுகிற சகோதரி. மேரிக்கு கர்ப்பத்தின் கனி கிடைக்க....

பணித்தளம் : **அய்யனேரி** – சீக்கிரத்தில் ஆலயம் கட்டப்பட.... இங்கு நடக்கிற ஆராதனையில் அநேகர் கலந்து கொள்ள....

பணித்தளம் : **சாத்தூர்** – மிஷனெரி இல்லம் சீக்கிரமாய் கட்டி முடிக்கப்பட

பணித்தளம் : **பண்டுதன்பட்டி**

ஆலய ஆராதனையில் புதிய ஆத்துமாக்கள் கலந்து கொள்வதற்கு உள்ள தடைகள் மாற...

பணித்தளம் : **புல்லலக்கோட்டை**

ஆலயத்திற்கு வருகிற வாலிப பிள்ளைகளுக்கு ஏற்ற துணை கிடைக்க.... பிரேமா, ராமலெட்சுமி, ஷீலா இவர்களை கர்த்தர் ஆசீர்வதிக்க.....

**இராஜபாளையம்** – சகோதரி ஜோதி பாலையா மகன் பிரவின் எதிர்காலம் ஆசீர்வதிக்கப்பட.... ஏற்ற துணை கிடைக்க....

**சிவகாசி** – லீதியாள் அவர்களுக்கு தேவன் குழந்தை பாக்கியம் கொடுக்க...

பணித்தளம் : **புல்லக்கவுண்டன்பட்டி**

ஞானஸ்நானத்திற்கு ஒப்புக் கொடுத்தவர்கள் ஏற்ற வேளையில் ஞானஸ்நானம் பெற்று கர்த்தருக்குள் நிலைத்து நிற்க...

பணித்தளம் : **மைப்பாறை**

புதிய ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட.... அமுதா, கஸ்தூரி இவர்களின் தேவைகள் சந்திக்கப்பட (வீடுகட்ட)

பணித்தளம் : **திருவேங்கடம்**

சகோதரி. மேரிக்கு திருமண காரியம் தடைகள் மாறி திருமணம் நடைபெற....

பணித்தளம் : **முத்தாண்டியாபுரம்**

**தூங்கா ரெட்டிப்பட்டி** – அனுஷயா நடக்கமுடியாமல் படுத்த படுக்கையில் இருக்கிறார். அவர்கள் குடும்பத்தில் 3 பேர் நடக்க முடியாமல் இருக்கிறார்கள். கர்த்தர் அற்புதம் செய்ய...

பணித்தளங்கள், **அத்தியூத்து, சீதற்பநல்லூர், சோலைசேரி, சிலுக்கன்குறிச்சி, ஆலங்குளம்** ஆகிய இடங்களில் நடக்கிற ஊழியங்கள் மூலம் அநேக ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட

**திருச்சி மாவட்டம்**

பணித்தளம் : **தோப்புப்பட்டி**

இங்கு நடக்கிற ஊழியங்களுக்காக.... ருத்திரை ராஜ் குடும்ப பிரச்சனைகள் மாற.... இவரது மனைவி இரட்சிக்கப்பட.... பேசங்கம் பட்டி, சரவணம்பட்டியில் அநேக ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட....



**மதுரை மாவட்டம்**

பணித்தளம் : **திரளி**

சகோ. வேதம் என்பவருக்கு மூளை கட்டி இருந்து ஆப்ரேஷன் பண்ணி சுயநினைவு இல்லாமல் இருக்கும் இவருக்கு தேவன் அற்புதம் செய்ய ஜெபிப்போம்.

**அரியலூர் மாவட்டம்**

பணித்தளம் **மிஸ்பா** : வெத்தியார்வெட்டு, இருதயபுரம், மாதாபுரம், பிச்சனூர், காட்டாத்தூர், கல்லாத்தூர் ஆகிய இடங்களில் சந்திக்கப்பட்ட மக்கள் தொடர்ந்து ஆலயத்திற்கு வர.... குடும்பங்களில் காணப்படுகிற போராட்டங்கள் மாற.... பிரச்சனைகளிலிருந்து விடுதலை பெற்று கர்த்தருக்குள் நிலைத்து நிற்க ஜெபிப்போம்.

பணித்தளம் : **அழகப்பபுரம்**

அழகப்பபுரத்தில் கீழ்குளம் பாலன் என்ற வாலிப சகோதரனுக்கு காணப்படும் நரம்பு தளர்ச்சியினால் கை, கால் செயலிழந்து காணப்படுகிறார். இவருக்காக ஜெபிப்போம்.

## *திருவசனத் தேர்வு — செப். 29 கடைசி ஞாயிறு*

நமது ஊழியத்தின் மூலம் வாரம் 4 என்ற புத்தகம் 52X4 வசனங்கள் என்ற அடிப்படையில் மனனம் செய்ய வெளியிடப்பட்டது. அந்த புத்தகத்தில் மொத்தம் 208 வசனங்கள் இருப்பிடம் எளிதில் நினைவில் வைக்க வசதியாக உள்ள விதத்தில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வசனங்கள் அடிப்படையில் ஒரு திருவசனத்தேர்வு மேற்கண்ட தேதியில் நடைபெறும், தேர்வுகள் ஞாயிற்றுகிழமை மதியம் 3 மணி முதல் 4.30 மணி வரை நடத்தப்படும்.

| | | |
|---|---|---|
| தேர்வு : | **9 - 15 வயதினர்** | **16 - 30 வயதினர்,** |
| | **31 - 45 வயதினர்** | **45க்கு மேலான வயதினர்** |

என 4 பிரிவினர்களுக்கு நடைபெறும். ஒவ்வொரு பிரிவிலும் முதல் 3 பேருக்கு பரிசுகள் உண்டு, தேர்வினை தமிழ் அல்லது ஆங்கிலத்தில் எழுதலாம்.

**பரிசு விபரம்**

| | | |
|---|---|---|
| முதல் பரிசு | : | **1 கிராம தங்க நாணயம் + வேதாகமம்** |
| இரண்டாம் பரிசு | : | **½ கிராம் தங்க நாணயம் + வேதாகமம்** |
| மூன்றாம் பரிசு | : | **வேதாகமம்** |

தேர்வை நீங்கள் உங்கள் ஆலயத்தில், ஜெபஜக்கியத்தில், பள்ளி, கல்லூரியில் எழுதலாம். ஒரு தேர்வு மையத்திற்கு 25 பேருக்கு குறையாமல் எழுத வேண்டும்.

அல்லது நாங்கள் குறிப்பிடும் மையத்திற்கு வந்து எழுத வேண்டும். 25 பேருக்கு குறையாமல் எழுதும் தேர்வு மையங்களுக்கு தேர்வு மையம் வாரியாக பரிசுகள் உண்டு. 1 பிரிவினருக்கு ஒரு பரிசு வீதம் 4 பரிசுகள்.

தேர்வுக்கு அனுமதி கட்டணம் : ரூ.20 /- மட்டும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

**Grace Ministries, Abraham Nagar, Periyanayagapuram, Tuticorin-628 101.**

94432 89026, 94421 20257, 94431 95395